# 23 ஈழத்துச் சைவமரபு

சைவ சமயம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சைவமக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஈழத்திலே சைவத்தின் தொன்மை, வரலாறு என்பவற்றைப் பல்வேறு சான்றாதாரங்கள் மூலம் அறியலாம். தொல்பொருட்கள், இதிகாசங்கள், புராணக்கதைகள், வாய்மொழி மரபுகள், பிறநாட்டார் எழுதிய குறிப்புகள், இலக்கியங்கள் முதலானவற்றின் மூலமும் இலங்கை சரித்திர ஆய்வில் ஈடுபட்ட மேனாட்டறிஞர்களதும், இலங்கை அறிஞர்களதும் கருத்துக்களாலும் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே சைவ சமயமே நிலைபெற்றிருந்தது என்பதற்கு ஆதாரங்களாக அமைகின்றன.

திருமூலர் ஈழத்தைச் ''சிவபூமி'' என்று குறிப்பிட்டதிலிருந்தும் ஈழத்தில் சைவ சமயத்தின் தொன்மையை அறிய முடிகின்றது. இலங்கையின் பூர்வீகக் குடிகளான இயக்கரும், நாகரும் சிவனை வழிபட்டனர்.அவ்வாறே, ஈழத்தின் புராதன ஈச்சரமான திருக்கேதீச்சரம் நாகர்களது பிரதான வழிபாட்டுத் தலமாக இருந்ததென்பதும் ஆய்வாளர் கருத்தாகும்.

இலங்கையில் வாழ்ந்ததாகக் கருதப்படும் மாதுவட்டா, விசுவகர்மா, மயன், குபேரன், இராவணன், மண்டோதரி, முதலியோர் சிவ வழிபாட்டினராக இதிகாசத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளனர். மயனின் மகளும் இராவணனின் மனைவியுமாகிய மண்டோதரி வழிபட்ட தலமாகத் திருக்கேதீச்சரம் விளங்குகின்றது. இலங்கை வேந்தனான இராவணன் சிறந்த சிவ பக்தியுடையவனாகப் போற்றப்படுகின்றான். இதனை, **''இராவணன் மேலது நீறு''** என சம்பந்தர் பாடியுள்ளார். இராவணனும் அவனது தாயும் வழிபட்ட தலமாகத் திருக்கோணேச்சரம் விளங்குகின்றது. இராவணன் தன் தாயின் அபரக்கிரியைகள் செய்வதற்காக அமைக்கப்பெற்றதே திருகோணமலையிலுள்ள கன்னியா தீர்த்தமெனத் தட்சண கைலாய புராணம் கூறுகின்றது.

இலங்கையில் வாழ்ந்த மக்களிடையே முருகவழிபாடு நிலைபெற்றிருந்தமையை, புத்தளப்பகுதியில் பொன்பரிப்பில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருளாய்வொன்று நிரூபித்துள்ளது. தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூரில் கிடைத்தவை போன்ற வேலாயுதங்களும், சேவற்சிலையும், காவடிச் செடில்களும், ஈழத்தின் மாதோட்டம், கந்தரோடை முதலிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டன. இவை ஈழத்தின் சைவ மரபை நிரூபிக்கின்றன.

விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரும், பின்னரும் இந்நாட்டிற் சைவம் செழிப்புற்றிருந்ததென வணக்கத்துக்குரிய வல்பொல இராகுல தேரர் எழுதிய **''இலங்கையில் பௌத்த வரலாறு''** எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். திரு. ஜே .டபிள்யூ ரெனற் என்பவர் எழுதிய **''இலங்கைச் சரித்திரம்''** என்ற நூலில் இலங்கையில் ஆதியில் குடியேறியவர்கள் சைவர்களே எனக் கூறுகின்றார். உறுகுணைத் தேசிய பூங்காவில் கண்டெடுக்கப்பட்ட கி. மு. காலத்ததெனக் கணிக்கப்படும் கல்வெட்டொன்றில் **'சிவநகர்'** என்ற இடப் பெயர் குறிக்கப்பட்டிருந்தமையும் இதற்குச் சான்றாகின்றது.

யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூல் விஜயன் இலங்கைக்கு வந்து அரசாட்சியை ஏற்றதும் பழைய சிவாலயங்களைத் திருத்தினான் என்றும், பாதுகாப்புக்காக நாற்புறமும் நான்கு புதிய சிவாலயங்களை அமைத்தானென்றும் கூறப்படுவதால் அவையே பண்டைய ஈச்சரங்களெனவும் அறியப்படுகின்றது. இந்த வகையில் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே சைவ சமயம் நிலை பெற்றிருந்தது என்பது தெரிய வருகின்றது.

அநுராதபுரக் காலத்தில் (கி.மு. 4 - கி.பி. 10 ஆம் நூற்றாண்டு) சைவ சமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது. விஜயனுக்குப் பின் அநுராதபுரத்தை ஆண்ட பண்டு வாசுதேவன், அபயன், பண்டுகாபயன் முதலியோர் சைவர்களாகவே இருந்திருக்கின்றனர். கி.மு 145 - 101 வரையிலான காலத்தில் அநுராதபுரத்தை ஆண்ட எல்லாளன் என்னும் தமிழ் மன்னனது காலத்தில் சைவம் சிறப்புப் பெற்றிருந்தது என்பர்.

பொலனறுவைக் காலப்பகுதியில் (கி.பி. 11 - 13 ஆம் நூற்றாண்டு) முன்னரிலும் பார்க்க ஈழத்தின் பல பாகங்களிலும் சோழ மன்னர்களால் சிவாலயங்கள் கட்டப்பட்டன. பொலனறுவையில் மட்டும் பத்துச் சிவாலயங்கள் கட்டப்பட்டன. வானவன்மாதேவி ஈச்சரம் இராஜராஜனின் மனைவியின் பெயரால் கட்டப்பட்டது.



இலவச விநியோகத்திற்காக

இங்கு தினமும் ஆகம விதிப்படி பூசைகள் நடைபெற்று வந்தன. இதனைக் கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இவை யாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது ஈழத்தில் புராதன காலம் முதலே சைவ சமயம் நிலவி வருகின்றது.

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஈழத்தின் சைவத்தின் தொன்மையை அறிய உதவும் சான்றாதாரங்களைக் குறிப்பிடுக.
2. ஈழத்தைச் "சிவபூமி" என்று குறிப்பிட்டவர் யார்?
3. இலங்கையில் வாழ்ந்த மக்களிடையே முருகவழிபாடு நிலைபெற்றிருந்தமைக்கான சான்றுகள் எவை?

**செயற்பாடு**

1. "இலங்கை வேந்தனான இராவணன் சிறந்த சிவபக்தியுடையவன்" என்ற தலைப்பில் 5 நிமிடம் உரை நிகழ்த்துக.

**பாடச்சுருக்கம்**

- சைவத்தின் தொன்மை, வரலாறு என்பவற்றை அறிய பல்வேறு சான்றாதாரங்கள் உள்ளன.
- இலங்கையில் வாழ்ந்த மக்களிடையே முருகவழிபாடு நிலைபெற்றிருந்தமைக்குப் புதைபொருட் சான்றுகள் உள்ளன.


இலவச விநியோகத்திற்காக